සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வங்கிக்கு பயிலுநர் நொத்தாரிஸ் எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையும் வேகப் பரீட்சையும் - 2016**

Written Test and Speed Test for the Selection of Trainee Notary Clerks to the Bank of Ceylon - 2016

**(01) எழுத்துப் பரீட்சை**
Written Test

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

---

**1.** (i) நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆளொருவர் ஒரு நொத்தாரிசு பதவிக்கு நியமிக்கப்படும் முறையைக் குறிப்பிடுக.

(ii) சட்டத்தரணி தவிர்ந்த ஆளொருவர் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் நொத்தாரிசாக வருவதற்கான தகைமைகள் யாவை?

(iii) ஒரு வலிதான ஆணைப் பத்திரமின்றி நொத்தாரிசாக தொழிலாற்றுவதற்கு நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் தரப்பட்டுள்ள தண்டங்கள் யாவை?

(iv) நொத்தாரிசாக வருவதற்கு முன்னர் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் தேவைப்பாடொன்றாக ஆளொருவரால் கொடுத்துதவப்படவேண்டிய பிணைப் பொறுப்பு வகைகள் யாவை?

(v) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்ற எப் பெயர் கொண்ட காணித்தண்டுகள் தொடர்பில் பிரிவிடல் சட்டம் **ஏற்புடைத்தாதலாகாது?**

(vi) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறு சொத்ததாண்மைச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள **மூன்று** வேறுபட்ட வகையினதான வரைபடங்கள் யாவை?

(vii) 'முற்பதிவு' எனப்படுவது யாது?

(viii) அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் ஓர் உறுதியானது ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் ஏன் அவசியமாகின்றது?

(ix) 'அற்றோணித் தத்துவம்' என்பது யாது?

(x) கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறு 'தொகுதிகடன் பத்திரத்தை' குறிப்பிடுக.

*(02 × 10 = 20 புள்ளிகள்)*

**2.** (i) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒரு காணித் துண்டுக்கான உரித்துப் பதிவு எவ்வாவணம் தொடர்பாக பயனுறுத்தப்படுகின்றதோ அவ்வாவணம் யாது?

(ii) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ்

(அ) தனக்கு குறித்தளிக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் உரியவாறு நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான அலுவலர்கள் யாவர்?

(ஆ) உரித்து இடாப்புகளைப் பேணுவதற்குப் பொறுப்பான அலுவலர்கள் யாவர்?

(iii) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 'சொத்தாண்மையைப் பதிவு செய்தல்' பற்றி ஒரு சிறு குறிப்பெழுதுக.

*(20 புள்ளிகள்)*

**3.** (i) கைமாற்றல் உறுதியொன்றை எழுதி நிறைவேற்று முன்னராக அசைவற்ற ஆதனமொன்றின் விலை மதிப்பீடொன்றை பெறுதல் ஏன் அவசியமாகின்றது?

(ii) 'மாற்றுக் குறிப்பீடு (Cross Reference)' என்பது யாது?

(iii) ஒரு பிரசித்த நொத்தாரிசால் எழுதி நிறைவேற்றப்படும் ஒரு கைமாற்றல் உறுதிமீதும் மற்றும் அத்துடன் வங்கியொன்று சார்பாக எழுதி நிறைவேற்றப்படும் காணி தொடர்பான ஈட்டுமுறி மீதும் ஆன முத்திரைத் தீர்வுக் கொடுப்பனவு பற்றிய நடவடிக்கை முறையைக் குறித்துரைக்குக.

*(20 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**4.** (i) 'ஓர் ஆதனத்துக்கான வழியுரிமை' என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) ஆளொருவரால் கொள்வனவு செய்யப்படவுள்ள ஓர் ஆதனம் தொடர்பாகக் கண்டறியப்பட வேண்டிய வில்லங்கங்கள் யாவை?

(iii) ஈடு கொடுப்பவரால் வங்கிக்குக் கொடுக்கப்படவேண்டிய உரித்துப் பற்றிய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்படத் தேவைப்படுத்தப்படும் அத்தியாவசியமான விடயங்கள் யாவை?

*(20 புள்ளிகள்)*

**5.** (i) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் வழிமுறை யாது?

(ii) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முடிவுறாத் தொடர்ச்சியை (Lispenden) நீக்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்யத்தகவுள்ள **இரு** நபர்கள் யாவர்?

(iii) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்ட 'தடையெச்சரிக்கை (Caveat)' பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக.

*(20 புள்ளிகள்)*

❋❋❋

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வங்கிக்கு பயிலுநர் நொத்தாரிஸ் எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையும் வேகப் பரீட்சையும் - 2016**

Written Test and Speed Test for the Selection of Trainee Notary Clerks to the Bank of Ceylon - 2016

**(02) வேகப் பரீட்சை**

Speed Test

**10 நிமிடங்கள்**
10 minutes

வேகம்: நிமிடத்திற்கு 25 சொற்கள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

* வினாப்பத்திரத்தின் முதலாம் பக்கத்திலுள்ள பகுதி **I** ஐ பிழையின்றி தட்டச்சு செய்வது இந்தப் பரீட்சைக்காக சித்தி பெறப் **போதுமானதாகும்.**
* நேரம் மீதமிருப்பின் **மட்டும்** இரண்டாம் பக்கத்தில் தரப்பட்டுள்ள பகுதி **II** ஐ ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும். மேலும் நேரம் மீதமிருப்பின் இரண்டாம் பக்கத்தில் உள்ள பகுதி **II** ஐ மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும்.புள்ளிகள் வழங்கும்போது அது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படும்.
* முதலாம் பக்கத்தில் தரப்பட்டுள்ள பகுதி **I** ஐ மீண்டும் தட்டச்சிடுவதற்கு மேலதிக புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

## பகுதி I

இலங்கையின் பொருளாதாரத்தை எதிர்வருகின்ற ஆண்டுகளில் உயர் வேகத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளமையால், நாட்டில் கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் இவ்வளர்ச்சி உத்வேகத்துக்கு ஆதரவளிக்கும் விதத்தில் முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். நாட்டில் வீழ்ச்சியடைந்து செல்லும் தொழிலின்மை வீதம் மற்றும் இலங்கையில் தற்போது காணப்படும் குடித்தொகையியல் பண்புகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் என்பவற்றின் மத்தியில் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆகக் கருதப்படுமிடத்து, இலங்கை தற்பொழுது அனுபவிக்கின்ற குடித்தொகை மூலமான நன்மைகள் 2017ஆம் ஆண்டளவில் படிப்படியாகக் குறைவடையக்கூடுமென்பதால், இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டிய முக்கியமான துறைகளிலொன்றாகக் குறைந்த தொழிற்படைப் பங்கேற்பு வீதம் காணப்படுகின்றது.

பொருளாதாரமானது நியாயமான உயர் வேகத்தில் வளர்ச்சியடைவதற்காக, தேர்ச்சிபெற்ற மற்றும் நன்கு பயிற்றப்பட்ட தொழிற்படையானது சாத்தியமான வளர்ச்சியின்மூலம் அடையாளம் காணப்பட்ட துறைகளின் அதிகரித்த கேள்விகளை வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகிறது. இலங்கையின் எதிர்கால வளர்ச்சி உத்வேகமானது தேர்ச்சிபெற்ற அலுவலர்களைப் பிரதான உள்ளீடாகக் கருதுகின்ற, பணி அடிப்படையிலான கைத்தொழில்களினால் பிரதானமாக ஆதரவளிக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதாரமொன்றின் வேலைவாய்ப்பின்மை வீதத்தின் வீழ்ச்சியானது, தொழில் தேடுகின்ற மக்கள் வெற்றியடைந்துள்ளமையைக் காட்டும் சாதகமான குறிகாட்டியாக வழமையாக நோக்கப்படுவதன் காரணத்தால் ஒரு சாதகமான அபிவிருத்தியாகக் கருதப்படுகின்றது.

(நேரமிருப்பின் மறுபக்கத்தில் பகுதி **II** இல் உள்ள பந்தியையும் பொறிக்கவும்.)

**பகுதி II**

நாட்டின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது நிலையான விலைகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது. இதன்படி, அடிப்படையாண்டென அறியப்படுகின்ற குறிப்பிட்ட ஆண்டின் விலைகளில், குறிப்பிட்ட ஆண்டிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்குமான நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பது பொருத்தமானதென்பதனால், மீள்மதிப்பீடு, பணச்சுருக்கம், அல்லது மிகைக்கணிப்பு ஆகிய முறைகளைப் பின்பற்றி நடைமுறைச் சந்தை விலைகளின்கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்பட்ட விலைகளின் தாக்கம் அகற்றப்பட்டது. இந்நோக்கத்திற்காகக் குறைந்த பொருளாதாரத் தளம்பல்களுடனான பொருத்தமான அடிப்படையாண்டினை இனங்காண்பது முக்கியமானதாகும். ஏனெனில், நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுகையில், அவ்வாண்டின் விலைகள் நிலையானதாகக் கருதப்படுகின்றது.

மேலும் தேசிய கணக்குகள் முறைமை வழிகாட்டல்கள் ஐந்தாண்டுகளுக்கொருதடவை மாற்றத்தின் தேவைப்பாட்டினை வலியுறுத்துகின்றது. இலங்கையின் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் அவதானிக்கக்கூடிய அமைப்பு ரீதியான மாற்றங்களை அனுபவித்துள்ளது. எனினும், இலங்கையில் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொடர்களின் அடிப்படையாண்டு 2002 ஆகும்.

(நேரம் மீதமிருப்பின் இப்பக்கத்தில் உள்ள பகுதி **II** ஐ மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தட்டச்சிடவும்.)

* * *